2020 மார்ச் 12]

ஏற்கெனவே, இந்த வெறிநாய்க் கடி அனைத்திற்கும் பொதுவாக Anti Rabies Vaccine *போடப்படுகிறது. ஒரு காலத்தில் இந்த வெறிநாய்க் கடி அதிக அளவில் இருந்தது. ஆனால், தற்போது அந்த நிலை இல்லை. முன்பெல்லாம் நாய்க் கடி என்றால் நாம் அனைவருமே பயப்படும் சூழ்நிலை இருந்தது. நாய் கடித்தால் தொப்புளைச் சுற்றி 16 ஊசிகள் போட வேண்டும் என்று நம்மை பயமுறுத்துவதுண்டு. தற்போது அதுபோன்ற நிலை இல்லை.* Anti Rabies Vaccine *தற்போது போடப்படுகின்றது. அதன்மூலம் நாய்க்கடிக்கான மருந்துகள் செலுத்தப்படும்போது, அந்த நாய்க் கடியின்மூலம் பரவக்கூடிய கிருமியால் ஏற்படக்கூடிய இறப்பே இல்லாத நிலையை இன்றைக்கு உறுதிப்படுத்தியிருக்கிறோம். இருப்பினும் தாங்கள் குறிப்பிடுகின்ற அந்த மருந்துகள் தாலுகா அளவில்* additional P.H.C.*-ல் இருப்பதைத் தொடர்ந்து அரசு உறுதி செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

83—

உலர்களம்

***48509—திரு. சபா. ராசேந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதியில் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, **வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதியில் உலர்களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

முற்பகல் 11–35

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், கீழக்குப்பம் ஊராட்சி, நடுக்குப்பம் ஊராட்சி மற்றும் மருவூர் ஊராட்சி உள்ளிட்ட பகுதிகளில் அதிகமாக விளைகின்ற முந்திரியினை உலர வைப்பதற்கு உலர்களம் தேவைப்படுகிறது. அதேபோன்று மானாவாரிப் பயிர்களான உளுந்து, கொள்ளு, கேழ்வரகு போன்றவற்றை அறுவடை செய்கிறபோதும் அவற்றை உலர வைப்பதற்கு உலர்களம் தேவைப்படுகின்றது. முந்திரியைப் பொறுத்தவரை அறுவடை செய்கின்றபோது 15 சதவிகிதம் ஈரப்பதமாக இருப்பதை 2, 3 நாட்களாக உலர வைத்து, 7 சதவிகிதத்திற்குக் குறைத்தால்தான் அந்த முந்திரியைப் பாதுகாத்து, சேமித்து வைத்து, நல்ல விலை வருகின்றபோது விற்பதற்கு விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும். அதற்குத் தேவையான 2 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் கீழக்குப்பம் பகுதியில் உள்ளது. எனவே, ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் பயன்பெறுகின்ற வகையில் உலர்களத்தை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். 'சாத்தியம் இல்லை' என்று கூறியிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்து, அந்த உலர்களத்தை அமைத்துத் தருவதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக மொத்தம் 105 உலர்களங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதியிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மருவூர் கிராமத்தில் உலர்களம் ஒன்று அமைக்கப்பட்டு, விவசாயிகளின்

2020 மார்ச் 12]

பயன்பாட்டில் உள்ளது. மேலும், கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதியிலிருந்து அப்பகுதியிலுள்ள பாலிக்குளம் கிராமத்தில் கடலூர் விற்பனைக் குழு நிதியிலிருந்து ரூபாய் 8 இலட்சம் மதிப்பீட்டில் உலர்களம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதிக்கு அருகில் உள்ள மேற்கூறிய உலர்களத்தை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். இருப்பினும், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதியில் உலர்களம் அமைப்பதற்குத் தேவையிருப்பின், இடம் கிடைக்கும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, விற்பனைக் குழு நிதியின் மூலமாக உலர்களம் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பரிசீலிக்கப்படும்' என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு தேவையான நிலம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். அதற்கு நிதி ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், கடலூர் மாவட்டத்தில் முந்திரி அதிகமாகப் பயிரிடப்படுகின்ற பகுதி பண்ருட்டி ஒன்றியப் பகுதி. நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தோட்டக்கலை விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையிலே, முந்திரிக்கான சிறப்பு மையத்தை கடலூர் மாவட்டத்திற்கென அறிவித்திருக்கின்றார்கள். 75 சதவிகிதம் முந்திரியை விளைவிக்கின்ற பண்ருட்டி ஒன்றியப் பகுதியில், முந்திரி சிறப்பு மையத்தை அறிவித்து செயல்படுத்தினால், தோட்டக்கலை விவசாயிகளை அது ஊக்குவிப்பதாகவும், அவர்களுக்குப் பயனுள்ளதாகவும் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு முந்திரி சிறப்பு மையத்தை நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், காடாம்புலியூரிலோ அல்லது பேர்பெரியான்குப்பம் ஊராட்சியிலோ அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2020 மார்ச் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தரிசு நிலத்தின் தங்கச் சுரங்கம்' என்றழைக்கப்படும் முந்திரி, தமிழ்நாட்டில் 90,058 ஹெக்டேர் பரப்பளவில் கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, அரியலூர் போன்ற மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டு, 57,988 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. கடலூர் மாவட்டத்தில் மட்டும் 28 ஆயிரத்து 258 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி முந்திரிக்கொட்டைகளை விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்து விவசாயிகள் பயன்பெறும் வகையில், பண்ருட்டி வட்டாரம், காட்டாண்டிகுப்பத்தில் 'Sattva' என்னும் முந்திரி ஏற்றுமதி மண்டலம் அரசின் நிதியுதவியுடன் ஏற்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. இதன்மூலம் முந்திரி விவசாயிகள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் முந்திரி பதப்படுத்தும் தொழிலாளர்கள் பயன்பெற்று வருகின்றனர். மேலும், தற்போது இந்த ஏற்றுமதி மண்டலத்திற்குட்பட்ட 30 முந்திரி விளைபொருள் குழுக்களுக்கு, 30 முந்திரி பதப்படுத்தும் இயந்திரங்கள் ரூபாய் 4 கோடியே 4 இலட்சம் அரசால் வழங்கப்பட்டு, முந்திரி விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். முந்திரி விவசாயிகளின் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையிலும், அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டித்தரும் வணிகப் பயிரான முந்திரி சாகுபடியை மேம்படுத்தவும், அகில இந்திய அளவில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடனும் ரூபாய் 3 கோடி செலவில் கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கான சிறப்பு மையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்படவுள்ளது. இம்மையத்தின்மூலம், முந்திரி பயிர் உற்பத்தியை அதிகரிக்க, நவீன தொழில்நுட்பமான அடர் நடவு முறை, கிளை மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை ஆகியவை குறித்து விவசாயிகளிடம் பெயர் விளக்கம் அளித்தல் மற்றும் பயிற்சி வழங்கி, எதிர்காலத்தில் முந்திரி உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதிக்கு முந்திரி சிறப்பு மையத்தை ஏற்படுத்துவதற்கு சாத்தியக்கூறுகள் இருந்தால், அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.